[1978 செப்டம்பர் 13

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அப்படிப்பட்ட குறிப்பு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வந்திருக்கிறது. ஆனால் 28-2-78-க்குப் பிறகு ஊராட்சிகளைப் பிரிக்க அரசு தடை விதித்திருக்கும் காரணத்தால் அவர் அந்தக் குறிப்பை ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அனுப்பவில்லை.

திரு. நா. சுந்தரராஜ்: தேர்தல் தள்ளிப் போடுவதன் காரணமாக அந்தத் தடையை நீக்கிவிட்டு இன்னும் காலம் தாழ்த்தாது அந்தப் பணியைச் செய்த பிறகு தேர்தலை நடத்த அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அந்தத் தடையை நீக்க உத்தேசம் இல்லை.

தூத்துக்குடி நகராட்சி.

*வினா எண் 187—திரு. ந. தனசேகரன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடிக்கு அருகில் அமைந்துள்ள புதிய துறைமுகம், கனநீர் தொழிற்சாலை, உரத் தொழிற்சாலை ஆகிய பஞ்சாயத்துப் பகுதிகளை தூத்துக்குடி நகராட்சியுடன் இணைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி: தூத்துக்குடி நகராட்சி நிதிப் பற்றாக்குறையால் பலகீனப்பட்டுள்ளதால், புதிய துறைமுகம், கனநீர் தொழிற்சாலை, உரத் தொழிற்சாலை ஆகிய பஞ்சாயத்துப் பகுதிகளை தூத்துக்குடி நகராட்சியுடன் இணைப்பது குறித்து அரசு மீண்டும் பரிசீலனை செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அவற்றை ஊராட்சி நகரியமாக ஆக்குகின்ற செயற்குறிப்பு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இருக்கிறது.

வட ஆற்காடு மாவட்டத்தில் தொழிலாளர் நலப்பணிகள்.

*வினா எண் 188—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78-ல் தொழிலாளர் நல நிதியிலிருந்து வட ஆற்காடு மாவட்டத்தில் தொழிலாளர் நலப்பணிக்காக எவ்வளவு செலவு செய்யப்பட்டது?

(ஆ) அதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகள் யாவை?

1978 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) வடஆற்காடு மாவட்டத்தில் 1977-78-ல் தொழிலாளர் நலப்பணிக்காக தொழிலாளர் நல நிதியிலிருந்து செலவழிக்கப்பட்ட தொகை 57,442.93 ரூபாய் ஆகும்.

(ஆ) தொழிலாளர் நலப் பணிக்காக குடியாத்தம் மற்றும் வாணியம்பாடி ஆகிய இடங்களில் முறையே தையல் பயிற்சி நிலையம் ஒன்றும் குழந்தைகள் காப்பகம் ஒன்றும் 1-1-76 முதல் நடைபெற்று வருகிறது.

சென்னை— மகாபலிபுரம் பகுதியில் ஹைட்ரோலாஜிகல் சர்வே.

*வினா எண் 189— திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் சென்னையிலிருந்து மகாபலிபுரம் வரையில் ஹைட்ரோலாஜிகல் சர்வே நடந்துள்ளதா ?

(ஆ) அதன் விளைவாக அமைக்கப்பட்ட குழாய்களில் நல்ல தண்ணீர் கிடைப்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) சென்னைக்கு தெற்கே திருவான்மியூரிலிருந்து கோவளம் வரை (பக்கிங்காம் கால்வாய் கடலுடன் முகக்குமிடம் வரை) ஹைட்ரோ லாஜிகல் சர்வே நடத்தப்பட்டுள்ளது.

(ஆ) உண்மை.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து மகாபலிபுரம் வரை ஹைட்ரோ லாஜிக்கல் சர்வே, பூகர்ப்ப இயல் ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளது. இது மத்திய அரசாங்கத்தின் உதவியோடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த இடங்களில் பெரிய குழாய்களை அமைத்து இருக்கிறார்கள், அங்கே மிகவும் நல்ல தண்ணீர், குடிப்பதற்கு லாயக்கான தண்ணீர் கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது. அரசாங்கம் அதைப் பரிசீலித்து அந்தத் தண்ணீரை சென்னைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவல் அப்போது இருந்த மாநில அரசே அதைச் செய்ததாகத்தான் இருக்கிறது. மத்திய அரசு செய்ததாக மாண்புமிகு உறுப்பினர் கூறுகிறார்கள், அந்தத் தகவலைக் கொடுத்தால் நல்லதாக இருக்கும். அங்கே கிடைக்கிற தண்ணீரைப் பரிசீலித்து அங்கே இருந்து நிரம்பத் தண்ணீரை கொண்டு வரலாமா என்று ஆலோசித்துக் கொண்டு இருக்கிறோம். அநேகமாக 30 ஆம் தேதியிலே இருந்து கூட தென் சென்னைக்குக் கொண்டு வருகிறோம், அதற்காக ஒரு விழாவையே கூட நடத்தி கண்அதித் தணீர் கொடுக்கலாம் என்று இருக்கிறோம்.